தமிழீழ தாயகத்துக்காக உயிர்நீத்த நமது வீரர்களை நமது வீர மண்ணின் மார்பை பிளந்து புதைத்தோம். உயிரற்ற சடலங்களாக அவர்கள் மண்ணுக்குள் மறையவில்லை. அவ்வுயிர்கள் கருவாகி, காலத்தால் உருவம் பெற்று, தேசத்தின் சுதந்திரமாக வடிவம் பெற்று வருகிறது. தமிழீழம் என்ற அந்த சுதந்திர தேசம் வரலாற்றின் குழந்தையாக விரைவில் பிறப்பெடுக்கும். அந்த சுதந்திர தேசத்தின் ஆன்மாவாக ஆளுமையாக எமது மாவீரர்கள் என்றும் எம்முடன் இணைந்து வாழ்வார்கள்.

எமது வீர விடுதலை வரலாற்றின் ஒரு முக்கிய திருப்பு முனையில் நின்றவாறு இன்று எமது மாவீரர்களை நாம் நினைவு கொள்கிறோம். எமக்கு முன்னால் கால விரிப்பில் ஒரு புது யுகம் எமக்காக காத்து நிற்கிறது. எமக்கு பின்னால் கடந்த காலத்தில் இரத்தம் தோய்ந்த வீர வரலாறு நீண்டு செல்கிறது.

மானிடத்தின் விடுதலைக்காக மாபெரும் தியாகங்கள் புரிந்த வரலாற்று பெருமையுடன் எமது விடுதலை இயக்கம் பிறக்கப்போகும் புதுயுகத்தில் காலடி வைக்கிறது. இப்புதுயுகம் எமக்கு சொந்தமானது. அநீதியையும் அடக்குமுறையையும் எதிர்த்து நீதிக்கும் சுதந்திரத்துக்குமாக போராடிய மக்களுக்கு சொந்தமானது.

இப்புதுயுகத்தில் எமது மக்களின் நெடுங்கால கனவு நிறைவுபெறும். இத்தனை காலமும் எமது மக்களை பிடித்த துன்பமும் துயரமும் அகன்று எமது மக்களுக்கு விடிவு பிறக்கும். எமது மண்ணுக்கு விடுதலை கிட்டும். எந்த இலட்சியத்துக்காக எமது மாவீரர்கள் போராடி மடிந்தார்களோ அப் புனித இலட்சியம் இப் புதுயுகத்தில் நிறைவுபெறும்.

ஒப்பற்ற மாபெரும் இராணுவ வெற்றியின் சிகரத்தில் நின்றவாறு இன்று நான் மாவீரர் நினைவுரையை நிகழ்த்துகிறேன். இந்த மகத்தான இராணுவ வெற்றி முழு உலகத்தையும் வியப்பிலும் திகைப்பிலும் ஆழ்த்தியிருக்கிறது. இது ஒரு சாதாரண போரியல் சாதனையல்ல. போரியல் கலையில் ஓர் ஒப்பற்ற உலக சாதனையாகவே இவ்வெற்றி கருதப்படும். இந்த வெற்றியின் விஸ்வரூப பரிமாணம் கண்டு எமது எதிரி மட்டுமல்ல எதிரிக்கு பக்கபலமாக நின்று பயிற்சியும் ஆயுதமும் பண பலமும் வழங்கிவந்த உலக நாடுகளும் மலைத்துப் போய் நிற்கின்றன.

ஓயாத அலைகள் மூன்றாக குமுறிய இப்பெரும் சமர் ஒரு சில நாட்களில் இமாலய சாதனையை அடைந்தது. முழுப் பலத்தையும் ஒன்று குவித்து பெரும் படையெடுப்புக்களை நடத்தி வருடங்களாக மாதங்களாக தொடர் சமர்களை நிகழ்த்தி ஆயிரக்கணக்கில் உயிர்ப்பலி கொடுத்து சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருந்த வன்னியின் வளமிகு பகுதிகளை எமது வீரர்கள் கடுகதி வேகத்தில் மீட்டெடுத்தனர். வன்னி மண்ணில் அகலக்

கடுகதி வேகத்தில் மீட்டெடுத்தனர். வன்னி மண்ணில் அகலக் காலூன்றிய எதிரி தொடர் வலயமாக நிறுவிய படைத்தலங்களும் கட்டளை பீடங்களும் இருப்புப் பொட்டகங்களாக அமைக்கப்பட்ட இராணுவ முகாம்களும் மிகக் குறுகிய காலத்தில் மிகக் கூடிய வேகத்தில் புலிகளிடம் வீழ்ச்சியடைந்த அற்புதம் உலகத்தின் புருவத்தை உயர்த்தியது.

வன்னியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பழம்பெரும் பட்டினங்களிலிருந்து எதிரி இராணுவம் விரட்டப்பட்டது. அங்கெல்லாம் இப்பொழுது புலிக்கொடி மார்தட்டி பெருமையுடன் பறக்கிறது.

காட்டுத்தீயாக பரவிய இப்பெரும் சமரில் எமது தாயகத்தின் இதயபூமியான மணலாற்றின் ஒரு பகுதி மீட்கப்பட்டதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். காலம் காலமாக தமிழர் வாழ்ந்த இப் புனித மண்ணை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து தமிழர்களை கொன்றழித்து அங்கு சிங்கள குடியேற்றங்களை நிறுவிய சோக வரலாற்றினை எமது மக்கள் நன்கறிவர். வடக்கையும் கிழக்கையும் புவியியல் ரீதியாக இணைத்து வன்னியில் மிகச் செழிப்பான நிலங்களை கொண்ட எமது தேசத்தின் இதயபூமி மீண்டும் எமது கட்டுப்பாட்டில் வந்துகொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயம்.

இந்த மண்மீட்பு எமது போராட்ட வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை சுட்டுகிறது. போரியல் கலையில் புலிப்படை வீரர்களின் அபாரமான வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் இந்த ஓயாத அலைகள் மூன்று என்ற வன்னிப் பெரும் சமர் உலகத்துக்கு நிரூபித்து காட்டியிருக்கிறது. எமது படையணிகளின் களநிலை வேகமும் வீச்சும் பொதுவான கூட்டுச் செயற்பாடும் துரித கதியில் படைநகர்த்தும் ஆற்றலும் எதிர்த்து தாக்கும் உத்திகளும் அபாரமான துணிவும் தேர்ச்சியான கட்டுப்பாடும் உலக இராணுவ நிபுணர்களை வியக்கச் செய்து வருகிறது.

இந்த வரலாற்று சமரில் களமாடி வீர சாதனை படைத்த சகல போராளிகளுக்கும் படை நடத்திய தளபதிகளுக்கும் இச்சமரில் பங்குகொண்டு போராடிய எல்லைக்காப்பு படையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள். இந்தப் பெரும் சமரில் எமது போராளிகளுக்கு ஊக்கமளித்து உணவளித்து இரத்தமளித்து உதவிபுரிந்து பெரும் பங்காற்றிய தமிழீழ மக்களுக்கும் எனது இதயங் கனிந்த நன்றி.

நிலமீட்புக்காகவே இந்தப் போர் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. தமிழீழம் எமக்கு சொந்தமான நிலம். வரலாற்று ரீதியாக எமக்கு உரித்தான நிலம். எமது வாழ்விற்கும் வளத்திற்கும் ஆதாரமான நிலம். நாம் பிறந்து வாழ்ந்து வளர்ந்த நிலம். எமது தேசிய அடையாளத்துக்கு அடித்தளமான நிலம். இந்த நிலத்தை தனது சொந்த நிலம் என்கிறான் எதிரி.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை தீவில் சிங்கள இனவாதிகள் ஆட்சிபீடம் ஏறிய காலத்தில் இருந்து தமிழர் நிலம் விழுங்கப்பட்டு வருகிறது. தமிழர் நிலத்தை அபகரித்து சிங்கள மயமாக்குவது ஒருபுறமும் தமிழர் நிலத்தை ஆக்கிரமித்து அதன் வளங்களை அழித்து அங்கு வாழ்ந்த மக்களை அகதிகளாக்குவது இன்னொரு புறமுமாக எமது நிலம் மீது கொடுமை நடந்து வருகிறது. இந்த அநீதிக்கு எதிராகவே நாம் போராடுகிறோம்.

ஆகவே சாராம்சத்தில் எமது விடுதலைப் போரானது ஒரு மண் மீட்பு போராகும். எமக்கு சொந்தமான நிலத்தை மீட்டு அந்த நிலத்தில் எமது ஆட்சியுரிமையை இறைமையை நிலைநாட்ட நடைபெறும் போர்.

இந்த போரின் நோக்கம் குறிக்கோள் என்ன என்பதை இப்பொழுது எமது மக்கள் நன்கு உணரத் தொடங்கியுள்ளனர். சொந்த நிலத்தை இழந்து அந்த நிலத்தில் அமைதி வாழ்வை இழந்து அகதிகளாக அலையும் மக்களுக்கு சொந்த மண்ணின் மகிமை புரியும். அந்த மண்ணில் ஆக்கிரமித்து காலூன்றி நிற்கும் அன்னியரை விரட்ட வேண்டிய அவசியம் புரியும். இந்தப் புரிந்துணர்வால் ஏற்பட்ட விழிப்புணர்வு காரணமாகவே இந்த மண்மீட்பு போரில் எமது மக்கள் எமக்கு பக்க பலமாக நின்று பல்வேறு வழிகளில் பங்களித்து வருகிறார்கள். இன்று எமது தமிழீழ விடுதலைப் போரானது விரிவடைந்து மக்கள் போராக வளர்ச்சியும் எழுச்சியும் பெற்று வருகிறது.

எனது அன்பார்ந்த மக்களே, ஆண்டுதோறும் எனது மாவீரர் நினைவுரையில் நான் சமாதானத்தையும் சமாதான வழிகாண்பதற்கான அரசியல் தீர்வையும் வலியுறுத்தத் தவறவில்லை. அதேவேளை சமாதான வழியில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண சிங்கள பேரினவாதம் தயாராக இல்லை என்பதையும் நான் சுட்டிக் காட்ட தவறவில்லை.

சிங்களத்து அரசியலில் ஆதிக்கம் செலுத்தி மாறிமாறி ஆட்சிபீடம் ஏறிவரும் இரு பிரதான சிங்கள கட்சிகளும் சாராம்சத்தில் இனவாத கட்சிகளே. இவ்விரு கட்சிகளும் சிங்கள பௌத்த பேரினவாத சித்தாந்தத்தில் வேரூன்றி வளர்ந்தவை. அந்த வெறிபிடித்த தமிழ் விரோத சித்தாந்தத்தில் திளைத்தவை. கடந்த அரைநூற்றாண்டு காலத்துக்கு மேலாக தமிழினத்துக்கு எதிரான ஒடுக்குமுறையை முடுக்கிவிடுவதில் போட்டியிட்டு செயல்பட்டவை.

இந்த இன ஒடுக்குதல் வரலாற்றில் என்றுமில்லாத வகையில் தமிழினத்துக்கு கொடுமையிழைத்த பெருமை சந்திரிகாவின் ஆட்சியையே சாரும். சந்திரிகாவின் ஐந்தாண்டு ஆட்சிக்காலம் தமிழினத்துக்கு ஒரு சாபக்கேடாக அமைந்தது. தொடர்ச்சியான போரும் வன்முறையும் சாவும் அழிவும் பசியும் பட்டினியும் இடம்பெயர்வுமாக இக்கால கட்டத்தில் எமது மக்கள் எதிர்கொண்ட துயரம் மிகக் கொடுமையானது. இருண்ட இரத்தம் படிந்த வரலாற்று பக்கங்களை கொண்டதாக சந்திகாவின் அடக்குமுறை ஆட்சிக்காலம் நீண்டது. இந்தக் கொடிய ஆட்சியானது தமிழினத்தின் ஆன்மாவில் என்றுமழியாத வடுவை ஏற்படுத்தியது.

உள்நாட்டில் தமிழருக்கு எதிராக ஒரு பயங்கரவாத ஆட்சியை நடத்திக்கொண்டு வெளியுலகில் சமாதானம் விரும்பும் ஒரு ஜனநாயக தேவதையாக நாடகமாடினார் சந்திரிகா. தமிழர் தாயகத்தை முழுசாக ஏப்பம் விடும் ஒரு நாசகார போர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டு அதனை ஒரு சமாதானத்துக்கான போர் முயற்சியாக வர்ணித்தார். முழு உலகமும் அவரை நம்பியது. அவரது சமாதானப் போருக்கு ஆதரவு வழங்கியது. முழு உலகத்தையும் கண்கட்டி ஏமாற்றிய அரசியல் பரப்புரை வித்தைகளில் தமிழின துரோகிகளே சந்திரிகாவுக்கு பக்க துணையாக நின்றனர். நாம் சந்திரிகாவை நம்பவில்லை. நமது தேசிய பிரச்சினையை நீதியான முறையில் தீர்த்து வைக்கும் நேர்மையும் கொள்கைப்பாடும் அவரிடம் இருந்ததில்லை. சிங்கள பௌத்த பேரினவாதத்தின் நவயுகப் பிரதிநிதியாகவே நாம் அவரை கண்டோம். எனவே தான் நாம் சந்திரிகா அரசுடன் நேரடியாக பேச்சுக்களை நடத்த விரும்பவில்லை.

ஆயினும் நாம் சமாதான கதவுகளை மூடிவிடவில்லை. சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்துடன் சமாதான பேச்சுக்களில் பங்குகொள்ள நாம் தயாராக இருப்பதாக சென்ற ஆண்டு மாவீரர் நினைவுரையில் நான் அறிவித்தேன். நாம் சர்வதேச மத்தியஸ்தத்தை வேண்டியபோதும் சமாதான பேச்சுவார்த்தைக்கு ஏற்றதான சமாதான புறநிலைகள் உருவாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறினோம். போர் நெருக்கடி நீங்கிய நிலையில் இராணுவ ஆக்கிரமிப்பும் பொருளாதார நெருக்குவாரங்களும் அகன்ற ஓர் இயல்பான நல்லெண்ண சூழ்நிலையில் பேச்சுக்கள் நடைபெறவேண்டும் என்பதை நாம் தெளிவாக விளக்கியிருந்தோம்.

சமாதான பேச்சுக்களுக்கு உகந்ததான ஒரு நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்ற எமது யோசனையை சந்திரிகா அரசு ஏற்க மறுத்தது. போருக்கு ஓய்வு கொடுக்கவோ நில ஆக்கிரமிப்பை நிறுத்தவோ பொருளாதார தடைகளை நீக்கவோ சந்திரிகா விரும்பவில்லை. போரையும் பொருளாதார தடைகளையும் தமிழர் மீதான அரசியல் அழுத்தங்களாக பாவிக்கவே அரசு விரும்பியது. சமாதானத்துக்கான போர் என்ற சந்திரிகா அரசின் கோட்பாடு ஓர் இராணுவ தீர்வையே குறித்து நிற்கிறது. போர் மூலமாக தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து புலிகள் இயக்கத்தை தோற்கடித்து தமிழினத்தை அடிமைகொள்வதே இத்திட்டமாகும். கடந்த ஐந்தாண்டு காலமாக இப்போர்த் திட்டத்தை செயற்படுத்தவே அவர் ஓயாது உழைத்தார். எத்தனையோ வேதனைகளை சந்தித்தபோதும் அவர் தனது இராணுவ தீர்வுத் திட்டத்தை கைவிடவில்லை. இதனால் சமாதான வழிமுறைகள் பற்றியோ சமாதான பேச்சுக்கள் பற்றியோ அவர் அக்கறையோடு சிந்திக்கவில்லை. அதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகள் எதையும் எடுக்கவில்லை.

போரை தொடர்ந்து நடத்தியவாறு சில வரையறைகளுடன் இரகசியமாக பேச்சுக்களை நடத்தலாமென மூன்றாம் தரப்பு மூலமாக சந்திரிகா எமக்கு தூது அனுப்பி இருந்தார். நாம் அந்த யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒருபுறம் போரை நடத்திக்கொண்டு மறுபுறம் சமாதான பேச்சு நடத்துவது நடைமுறைச் சாத்தியமற்றது. அத்தோடு அபத்தமானதும் கூட. தொடரும் போரினால் எமது மக்கள் சாவையும் அழிவையும் அவலத்தையும் சந்தித்து நிற்க நாம் எதிரியோடு கைகோர்த்து சமரசம் பேசுவது முடியாத காரியம். அத்துடன் எந்தவொரு நிபந்தனையோடும் காலவரையோடும் பேச்சுக்களை நடத்த நாம் தயாராக இல்லை. சந்திரிகா எம்முடன் சமாதானத்துக்காக அன்புக்கரம் நீட்டவில்லை. பேச்சு என்ற போர்வையில் ஒரு பொறியை வைக்க முயன்றார். நாம் அந்த சமாதானப் பொறிக்குள் சறுக்கிவிழ தயாராக இல்லை.

கடலோரம் கட்டிய மண்வீட்டுக்கு நடந்த கதி போல சந்திரிகாவின் போர்த் திட்டத்தை விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் அடித்துச் சென்றுள்ளது. இச்சமரில் நாம் ஈட்டிய மாபெரும் வெற்றியின் விளைவாக இராணுவ சமபலம் எமக்கு சார்பாக திரும்பியிருக்கிறது. புலிகள் இயக்கத்தை பலவீனப்படுத்தி இராணுவ பேராதிக்க நிலையை பெற்றுவிட வேண்டும் என்ற சந்திரிகாவின் ஐந்தாண்டு கால பகிரத முயற்சியை நாம் ஒரு சில நாட்களில் முறியடித்துள்ளோம்.

ஆட்பலம் ஆயுதபலம் இராணுவபலம் மக்கள்பலம் என்ற ரீதியில் சகல பலத்தோடும் நாம் வலுப்பெற்று நின்றபோதும் எமது தாயகத்தை மீட்டெடுக்கும் போதிய சக்தி எம்மிடம் இருந்தபோதும் நாம் சமாதான பாதையை கைவிடவில்லை. உயிரழிவையும் இரத்தக்களரியையும் தவிர்த்து சமாதான வழியில் நாகரிகமான முறையில் தமிழரின் சிக்கலை தீர்க்கவே நாம் விரும்புகிறோம். சமாதான பேச்சுக்கள் ஒரு சமாதான நல்லெண்ண புறநிலையில் மூன்றாம் தரப்பு சர்வதேச மத்தியஸ்துவத்துடன் நடைபெற வேண்டும் என்பதையே நாம் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம். சமாதான புறநிலை எனும்பொழுது போர் ஓய்ந்து பொருளாதார தடைகள் அகன்று எமது மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் படைகள் விலகிய ஒரு இயல்பு நிலையையே நாம் குறிக்கிறோம்.

போரையும் நில ஆக்கிரமிப்பையும் பொருளாதார நெருக்குவாரங்களையும் தமிழர் மீது அழுத்தம் செலுத்தும் உத்திகளாக பாவிப்பதை நாம் அனுமதிக்க முடியாது. எவ்வித புறநிலை அழுத்தங்களும் இல்லாத இயல்பு நிலையில் சமத்துவமும் புரிந்துணர்வும் நிலவும் நல்லெண்ண சூழ்நிலையில் பேசுவதையே நாம் விரும்புகிறோம்.

நாம் பேச்சுக்கான கதவை திறந்தபடி சிங்கள தேசத்துக்கு ஒரு நல்லெண்ண சமிக்ஞையை காட்டுகிறோம்.

ஆயினும் நாம் வேண்டுவது போன்று ஒரு சமாதான சூழ்நிலையை தோற்றுவிப்பதற்கு சிங்கள அரசியல் தலைமைகள் இணங்கப்போவதில்லை என்பது எமக்குத் தெரியும். நீண்டகாலமாக கடைப்பிடித்துவரும் இராணுவ வன்முறைப் பாதையை சிங்கள இனவாதிகள் இலகுவில் கைவிடப்போவதில்லை என்பதும் எமக்கு தெரியும். எனவே சிங்கள அரசியல் தலைமைகளுடன் பேசி இணக்கம் கண்டு எமது தேசிய சிக்கலுக்கு தீர்வு காணலாம் என நாம் கற்பனையில் வாழவில்லை.

மனித உரிமைகளை மதியாத சிங்கள இனவாத அரசியலும் அதன் தமிழர் விரோதப் போக்கும் தமிழ் மக்களுக்கு ஒரேயொரு மாற்று வழியையே திறந்து வைத்திருக்கிறது. அதுதான் போராடி பிரிந்து சென்று தனியரசை உருவாக்கும் ஒரேவழி . இந்த வழியில் தான் சிங்கள தேசம் தமிழினத்தை தள்ளிக்கொண்டிருக்கிறது.

சுதந்திர தமிழீழ தனியரசே எமது தேசிய பிரச்சினைக்கு இறுதியான உறுதியாக தீர்வு என்பதை எமது மக்கள் எப்பொழுதோ தீர்மானித்து விட்டார்கள். எமது மக்களின் சுதந்திர அபிலாசையை சிலுவையாக தோளில் சுமந்து இத்தனை ஆண்டுகளாக எமது இயக்கம் இரத்தம் சிந்தி போராடி வருகிறது.

இன்று எமது சுதந்திர பயணத்தில் அந்த நீண்ட விடுதலை வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்பத்தை அடைந்துவிட்டோம். எமது போராட்ட இலக்கு ஒளிமயமான எதிர்காலமாக எமது கண்களுக்கு தெரிகிறது. நாம் நம்பிக்கையுடன் எமது இலட்சிய பயணத்தை தொடர்வோம். எமக்கு முன்னால் எழக் கூடிய எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நாம் நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்து செல்வோம். நாம் ஒன்றிணைந்த சக்தியாக ஒன்றுபட்ட தேசமாக ஒருமித்தெழுந்து எமது இலட்சிய பாதையில் இணைந்து செல்வோம். சாவைத் தழுவிய எமது வீரர்களின் ஆன்மாவாக சுதந்திரம் எமக்காக காத்து நிற்கிறது.

புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்.